தினகரன் 03/09/2024

# தமிழ்நாடு காகித ஆலை சார்பில் கண் சிகிச்சை முகாம்

## 820 பேருக்கு ₹ 1.50 லட்சம் மதிப்பில் உபகரணங்கள்



கண் சிகிச்சைமுகாமில் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் நாகராஜன், பொது மேலாளர் கலைச்செல்வன் மற்றும் மருத்துவக் குழுவினர்.

**வேலாயுதம்பாளையம், செப். 3:** கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து கரூர் மாவட்டப் பார்வை இழப்பு தடுப்புச் சங்கத்தின் உதவியுடன் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், ந.புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு உள்ளடங்கிய பொதுமக்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் டிஎன்பிஎல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. முகாமில் 820 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இலவச கண் பரிசோதனை முகாமை காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்), நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் மற்றும் மருத்துவக் குழுவினர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து துவக்கி வைத்தனர்.

முகாமில் கண் விழித்திரையில் பார்வையிழப்பு, பிறவி கண்புரை, கண்நீர் அழுத்த நோய், கிட்டப் பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து, கண் எரிச்சல், கண்வலி, கண்ணின் கருவிழியில் புண், கண் பார்வை குறைபாடு, மற்றும் இதர கண் சம்பந்தமான நோய்கள் உள்ள பொதுமக்கள் கலந்து கொண்டு இலவசமாக கண் பரிசோதனை செய்து கொண்டனர். மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து உள்ள 358 ஏழை, எளிய மக்களுக்கு ரூ.1.50 லட்சம் மதிப்பிலான மூக்கு கண்ணாடிகள் டி என் பி எல் காகித நிறுவனம் சார்பாக இலவசமாக வழங்கப்பட்டது.

முகாமில் 112 நபர்களுக்கு கண்புரை உள்ளது என கண்டறியப்பட்டு, முகாம் தினத்தன்றே அறுவை சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு அறுவை சிகிச்சை, உள்விழி லென்ஸ் அறுவை சிகிச்சை, மருந்து, தங்கும் வசதி, உணவு மற்றும் போக்குவரத்து ஆகிய அனைத்து வசதிகளும் இலவசமாக மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை செய்து கொடுத்தது. இவ்வாறு அறுவை சிகிச்சைக்காக அழைத்துச்செல்லப்பட்ட 112 நபர்களுக்கும் டிஎன்பிஎல் காகித நிறுவனத்தின் சார்பாக போர்வை, துண்டு, தண்ணீர் பாட்டில், பேஸ்ட், பிரஷ், சோப்பு, தேங்காய் எண்ணெய் போன்ற 8 வகையான அத்தியாவசிய பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

முகாமிற்கு கிராம பகுதிகளிலிருந்து கண் குறைபாடு உள்ளவர்களை அழைத்து வர ஆலை நிர்வாகம் புன்னம்சத்திரம், தளவாபாளையம், நொய்யல் குறுக்குசாலை, வேலாயுதம்பாளையம் மற்றும் ஓனவாக்கல்மேடு ஆகிய 5 வழித்தடங்களில் பேருந்து வசதிகளை ஏற்பாடு செய்திருந்தது.

முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. கண் பரிசோதனை முகாமில் டிஎன்பிஎல் காகித ஆலை பல்வேறு துறை அதிகாரிகள், அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**தினமணி (03.09.2024)**

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம்



முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர்கள்.

**கரூர், செப். 2:** டிஎன்பிஎல் ஆலை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற இலவச கண் பரிசோதனை முகாமில் 358 பேருக்கு ரூ.1.10 லட்சம் மதிப்பில் கண்ணாடி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புகழூர் காகித ஆலை மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, கரூர் மாவட்ட பார்வையிழப்பு தடுப்புச் சங்கம் ஆகியவற்றின் சார்பில் ஆலையைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு இலவச கண் பரிசோதனை முகாம் ஆலை வளாக டிஎன்பிஎல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

முன்னதாக, முகாமை ஆலையின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) எஸ். நாகராஜன், பொது மேலாளர் (மனித வளம்) கா. கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) ஜே. வெங்கடேசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தனர்.

முகாமில், கண் தொடர்பான நோய்களுக்கு பரிசோதனையும், சிகிச்சையும் அளிக்கப்பட்டது. முகாமில் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட 358 பேருக்கு

ரூ.1.10 லட்சம் மதிப்பிலான கண்ணாடிகள் டிஎன்பிஎல் ஆலை சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும், முகாமில் 112 பேருக்கு கண்புரை நோய் கண்டறியப்பட்டு, ஆலை சார்பில் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தினதந்தி 03/09/2024



## புகளூர் காகித ஆலை சார்பில்

# கண் பரிசோதனை முகாம்

நொய்யல், செப்.3-

புகளூர் காகித ஆலை, மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் கரூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கத்தின் உதவியுடன் காகித ஆலை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமை காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் மற்றும் மருத்துவக் குழுவினர் தொடங்கி வைத்தனர்.

முகாமில் கண் விழித்திரையில் பார்வையிழப்பு (சர்க்கரை நோய் காரணமாக), பிறவி கண்புரை, கண்ணீர் அழுத்த நோய், கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து, கண் எரிச்சல், கண் வலி, கண்ணின் கருவிழியில் புண், கண் பார்வை குறைபாடு, இதர கண் சம்பந்தமான நோய்கள் உள்ள பொது மக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டார்கள். மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட 358 பேருக்கு இலவச மூக்கு கண்ணாடிகள் காகித ஆலை சார்பில் வழங்கப்பட்டது. முகாமில் 112 பேருக்கு கண்புரை உள்ளது என கண்டறியப்பட்டு, மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதையடுத்து அவர்களுக்கு காகித ஆலை சார்பில் போர்வை, துண்டு, தண்ணீர் பாட்டில், பேஸ்ட், பிரஷ், சோப்பு, தேங்காய் எண்ணெய் போன்ற 8 வகையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது. இதில், புகளூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நன்செய் புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்குட்பட்ட 820 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.